OS: 169/2022

Date: 07.07.2026

பெயர் : முருகேசன் **(வா.சா.1) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1. தாவா சொத்தை யாரிடமிருந்து நான் கிரயம் பெற்றேன் என்றால் ரங்கநாதன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். ரங்கநாதனுக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்றால் 17.11.1964ம் தேதி கொங்குபட்டி கிராமத்தை சேர்ந்த மூங்கிலேறிப்பட்டி சின்னையன் மகன் கோவிந்தன் என்பவரிடமிருந்து 63 ¼ செண்ட் கிரயம் வாங்கிய வகையில் ரங்கநாதனுக்கு பாத்தியமாக இருந்தது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனக்கு கிரயம் செய்த ரங்கநாதன் தாவா சொத்து அவருக்கு பட்டா எண்.1158படி பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கும்நி லையில் தாவா சொத்து ரங்கநாதன் கிரயபடி பாத்தியப்பட்டதா அல்லது பட்டா படி பாத்தியப்பட்டதா என்றால் பட்டாபடி பாத்தியப்பட்ட சொத்தை ரங்கநாதன் விலைக்கு வாங்கியதாக சாட்சி கூறுகிறார். மேலும், ரங்கநாதன் விலைக்கு வாங்கிய பின்னர் தனிபட்டாவும் பெற்றுக்கொண்டார்.

2. தாவா சொத்தை கிரயம் பெற்றவுடன் சுவாதீனம் பெற்றுக்கொண்டேன் என்றால் ஆமாம். என் பெயருக்கு பட்டாவும் வாங்கி கொண்டேன். பட்டா எண்.1551 ஆகும். நான் கிரயம்பெற்ற சொத்தின் செக்குபந்தி என்னவென்றால் ஆவணத்திலேயே இருக்கும். பஞ்சாயத்து ரோட்டிற்கும் வடக்கு, முத்துகவுண்டர் நிலத்திற்கு கிழக்கு, நான் விற்ற நிலத்திற்கும் மேற்கு, ரங்கநாதனின் மீதியுள்ள நிலத்திற்கும் தெற்கு. நான் சொத்தை கிரயம் பெற்ற உடன் அ.வ.எண்.378/2017 என்ற வழக்கை இந்த வழக்கின் பிரதிவாதியும், செல்லபெருமாள், மணி, கண்ணுசாமி என்கிற கந்தசாமி, செல்வராஜ், சண்முகம், பரிசித், பெருமாள், ஜெயராமன், கண்ணன், சின்னபொன்னு ஆகியோர்கள் என் மீது மேற்கண்ட வழக்கை மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள் என்றால் ரங்கநாதன் என் மீது வழக்கு போடவில்லை. ரங்கநாதனை தவிர மற்ற அவரது சகோதரர்களான மேற்படி நபர்கள் அனைவரும் சேர்ந்து என் மீதும், ரங்கநாதன் மீதும் மேற்கண்ட வழக்கை தாக்கல் செய்தார்கள். அந்த வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. ஆனால் மேற்படி நபர்கள் வழக்கை தொடர்ந்து நடத்தாததால் அது தள்ளுபடி ஆகிவிட்டது.

3. மேற்படி வழக்கில் ரங்கநானும், அவரது தகப்பனாரும் தாவா சொத்து உட்பட சில சொத்துக்களை கிரயம் பெற்று ரங்கநாதனும், அவரது தகப்பனாரும் சேர்ந்து முத்துகவுண்டரின் வாரிசுகளுக்கு உயில் எழுதிவைத்துள்ளார்கள் என்றாலும் மேற்கண்ட விவரங்கள் மேற்கண்ட வழக்கில் சொல்லப்பட்டிருந்தது எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. மேற்கண்ட உயிலில் ரங்கநாதன் கையொப்பமோ, கைரேகையோ வைக்கவில்லை. அந்த உயில் பதிவு செய்யப்பட்ட உயில் என்றால் ஆமாம். இந்த விவரம் எனக்கு வழக்கு போட்டபின்னர் தெரியவந்தது என்றால் ஆமாம். வழக்கு போட்ட பின்னர் தான் தெரியவந்தது.

4. நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கில் அந்த உயில் செல்லாது என்ற பரிகாரமோ, ரங்கநாதன் எனக்கு எழுதி கொடுத்த பத்திரம் சட்டப்படி செல்லும் என்று விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. உயில் மோசடியாக தயாரித்தற்காக குற்ற வழக்கு தாக்கல் செய்வேன் என்று அறிவிப்பு அனுப்பி இருக்கிறேன். நான் வழக்கு சொ்தை கிரயம் பெறும்போதே அந்த சொத்தில் கட்டிடங்கள் இருந்தது என்றால் இல்லை. நான் கிரயம் பெற்ற பின்னர் அவர்கள் அந்த கடையை கட்டினார்கள். அப்போது நான் போட்டோ எடுத்து நீதிமன்றத்திலும் ஒப்படைத்திருக்கிறேன்.

5. நான் உயிலை மோசடியாக தயாரித்தற்காக வழக்கு தொடுக்க அறிவிப்பு அனுப்பியதாக சொல்லும் நிலையில் அந்த அறிவிப்பை ஒரு ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம். அவர்கள் கட்டிடம் கட்டியபோது மூன்று முறை காவல் நிலையத்தில் புகாரும் கொடுத்திருக்கிறேன். போலீசார் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். நான் புகார் கொடுத்ததற்கு ஆவணம் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம்.

6. வழக்கு சொத்து உயில்படி முத்துகவுண்டரின் வாரிசுகளான சின்னபொன்னு மற்றும் கண்ணன் ஆகியோர்களுக்கு பிரிந்த சொத்து என்றால் சரியல்ல. இந்த சொத்தை எனக்கு கிரயம் செய்து கொடுக்க ரங்கநாதனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றாலும், எனவே ரங்கநாதன் செய்து வைத்த கிரயம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றாலும் சரியல்ல. தாவா சொத்து இன்றுவரை சின்னபொன்னு மற்றும் கண்ணன் ஆகியோர்களின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருக்கிறது என்றாலும்,

பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கட்டிடங்களுக்கு எனக்கு வீட்டுவரி ரசீதும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

7. நானும், ரங்கநாதனும் கூட்டுசேர்ந்து சின்னபொன்னு மற்றும் கண்ணன் ஆகியோர்களின் சொத்தை அபகரிப்பதற்காக மோசடியான கிரய ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டிருக்கிறோம் என்றாலும், நான் ஒருபோதும் தாவா சொத்தின் அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. நான் வாங்கிய கிரயப்பத்திரம் சட்டப்படி செல்லாது என்றாலும், எனவே நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.